பிர்மஞானம் பதிப்பகம். வெளியீடு 1.

637

பிர்மமே சத்யம்.

பகுத்தறிவா?
துவேஷ புத்தியா?
ஈரோடு இராமசாமியாரின் — சூழ்ச்சி —

OFFICE OF THE REGISTRAR OF B...
14 SEP 1949
MADRAS

ஆசிரியர்:
வீர பரமஹம்ஸர்
ஸ்ரீ குரு கிணகர் சுவாமிகள்.

☆

பிரசுரித்தவர்:
M. S. வாசன்,
...ஞானம் பதிப்பகம், புலிவலம் P.O.,
...ம், திருவாரூர் S. I.

R34
N49
17258

பிர்மஞானம் பதிப்பகம். வெளியீடு 1.

பிர்மமே சத்தியம்.

பகுத்தறிவா? துவேஷ புத்தியா?

திருக்குறளின் திரைமறைவில் ராமசாமியாரின் சூழ்ச்சி.

ஆசிரியர்:
வீரபரமஹம்ஸர் கிணகர் சுவாமிகள்.

பிரசுரித்தவர்:
M. S. வாசன்,
பிர்ம ஞானம் பதிப்பகம், புலிவலம் P. O.,
விஜயபுரம், திருவாரூர்.

கும்பகோணம் ஸ்ரீ ராமா பிரிண்டிங் ஒர்க்ஸில்
பதிப்பிக்கப்பட்டது,

இதன் விலை அணு 3/-



ஆசிரியர் :

வீர பரமஹம்ஸர்

ஸ்ரீ குரு இணகர் சுவாமிகள்.

பிரமமே சத்தியம்.

பகுத்தறிவா? துவேஷ புத்தியா?

OFFICE OF ... BOOKS 14 ... 1949

திருக்குறளின் திரைமறைவில் ராமசாமியாரின் சூழ்ச்சி.

அன்பர் ஈ. வே ராமசாமியார் அவர்கள் தனது நாஸ்திக திராவிடக்கட்சியை மிகுதியான பொது மக்கள் வெறுத்து புறக்கணிப்பதை உணர்ந்து எங்கே தனது திராவிடக்கட்சி நாஸ்தியடைந்துவிடுகிறதோ என்ற சந்தேகங்கொண்டு தனது திராவிடக்கட்சியில் அதிருப்தியுற்றிருக்கிற பெரும்பாலான தமிழர்கள் தனது கட்சியில் சேராவிட்டாலும் அவர்கன் திராவிடக்கட்சியை சுமாரான கட்சி என்றாவது சொல்லிக் கொள்ளும் வகையில் நம்பிக்கையுண்டாகும்படி எப்படியாவது செய்து நாஸ்திக திராவிடக்கட்சி பலமடையச் செய்ய வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான தமிழர்களையெல்லாம் ஏமாளிகளென்று எண்ணிக்கொண்டு தமிழர்கள் வெகு பிரியமாய்க்கொண்டாடும் திருக்குறளை கருவியாகக்கொண்டு திருக்குறள் பக்தரைப்போல் திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்றும், திருக்குறள் தமிழர்களுடைய வேதமென்றும் கூறி திருக்குறளின் திரைமறைவில் ராமசாமியார் அவர்கள் தனது நாஸ்திக திராவிடக்கட்சி வலுவடைய நவீன சூழ்ச்சி செய்து வருகிறார். தமிழர்களே ஏமாறாதீர்கள்!

ராமசாமியார் தனது நாஸ்திக திராவிடக்கட்சி என்ற தூண்டியில் திருக்குறள் என்ற திவ்யமான உணவை கோர்த்துப்போடுகிறார் ராமசாமியாருக்கு ஏதோ நம் ஆஸ்திக புத்தி வந்துவிட்டதென்று நம்பி அவர் செய்யும் திருக்குறள் பிரச்சாரத்தில் மகிழ்ந்து விழுந்துவிடாதீர்கள். ஜாக்ரதை!

ஏன் இப்படி எழுதுகிறேனென்றால் ராமசாமியார் அவர்கள் கடவுளே இல்லை கடவுள் என்ற பதமே பொருளற்றது, கடவுளென்ற வார்த்தை ஒரு குறிப்பற்ற வார்த்தை யென்றெல்லாம் கூறும் கடைந்தெடுத்த ஒரு பக்கா நாஸ்திகர்.

திருவள்ளுவரோ கடவுள் என்பது உண்டு என்று கூறும் கடைந்தெடுத்த பழுத்த பக்கா ஆஸ்திகர்.

இப்படியிருக்க ஒரு நாஸ்திகர் ஒருபக்கா ஆஸ்திகர் நூலை ஆதரித்து எல்லோரும் திருக்குறளைப் படிக்க வேண்டுமென்று உபதேசம் செய்ய வருவதென்றால் இதன் உண்மையென்ன? வாசகர்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

தனக்கும், தனது திருக்கூட்டத்தாருக்கும் நாஸ்திக புத்தி போய் நல்லபுத்தி வந்துவிட்டது என்று பகிரங்கமாய் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டாலும் சூசகமாகவாவது நாஸ்திக புத்தி எங்களை விட்டுப்போய் விட்டது என்று வாஸ்தவமாக நிரூபித்துக் காட்டும் வகையில் ராமசாமியார் அவர்கள் திருக்குறளைக் கையாள்வது கையாளப்போவது உண்மையானால் திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்று ஈரோட்டு மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவந்த போது ஏன் அகரமுதலெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு என்ற கடவுள் நினைவூட்டும் முதற் குறளைக் கூறி கடவுள் நிலையைக் கருதவில்லை? ஏன் அதைப்பற்றி ஈரோட்டு மகாநாட்டில் பிரஸ்தாபிக்கவில்லை.

திருவள்ளுவரை ஒப்புக்கொண்டு, திருக்குறளையும் ஒப்புக்கொண்டு தனது நாஸ்திகப்போக்கிற்கு ஒத்துவாராத குறட்பாக்களையெல்லாம் திருவள்ளுவர் கூறியதல்ல. இடையில் தோன்றியவர்களால் எழுதிப் புகுத்தப்பட்ட இடைச்செருகல் என்று ராமசாமியார் கூறுவாரானால் இது பொருந்துமா? தனது நாஸ்திக திராவிடக்கட்சிக்குப் பொருத்தமான குறட்பாக்களை மாத்திரம் திருக்குறளிலிருந்து எடுத்துக்கொண்டு

மற்றவையெல்லாம் இடைச்செருகலென்று அன்பர் ராமசாமியார் கூறுவாரேயானல் இதைப்போல் இன்னொரு சாரார் தங்களுக்கும் தங்கள் கொள்கைக்கும் பொருத்தமான குறட்பாக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றவையெல்லாம் இடையில் தோன்றியவர்களால் எழுதிப் புகுத்தப்பட்ட இடைச்செருகலென்று கூறுகிருர்கள். இப்படியே ஒவ்வொரு கட்சிக்காரருக்கோ, அல்லது ஒவ்வொரு சாராருக்கோ, அல்லது தனிப்பட்ட ஒவ்வொரு மனிதருக்கோ, ஒவ்வொரு மதத்திற்கோ ஒத்துவராத குறட்பாக்களையெல்லாம் திருவள்ளுவர் எழுதியதல்ல, இடையில் வந்தவர்களால் எழுதிப்புகுத்தப்பட்ட இடைச் செருகலென்று சொல்லிக்கொண்டே போவார்களேயானல் திருக்குறளிலுள்ள அத்தனை குறட்பாக்களும் திருவள்ளுவர் கூறியது அல்ல என்று ஆகிவிடுமல்லவா?

இப்படி ஒவ்வொரு சாராரும், ஒவ்வொரு கட்சிக்காராரும், ஒவ்வொரு தனி மனிதரும் தங்கள் தங்கள் போக்கிற்கும் தங்கள் தங்கள் வாழ்க்கை சூழ்நிலைக்கும், ஒத்துவராத குறட்பாக்களையெல்லாம் திருவள்ளுவர் கூறியதல்ல. இடையில் வந்தவர்களால் எழுதிப் புகுத்தப்பட்ட இடைச்செருகல் என்று சொல்வது அறிவுடைமையாகுமா என்று கேட்கின்றேன்.

திருக்குறள்

ஒருவருக்கோ அல்லது ஒரு கட்சிக்காரர்கள் நோக்கத்திற்கோ ஒரு மதத்தின் நோக்கத்திற்கோ அல்லது மனித இனங்களின் வாழ்க்கை சூழ்நிலைக்கோ திருக்குறள் ஒத்துவரவேண்டுமா? அல்லது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதருடைய வாழ்வின் சூழ்நிலையும், பொதுப் புத்தியை புகட்டும் திருக்குறள் காட்டும் திவ்யமான வழியைப் பின்பற்றி சீர்திருத்தம் அடையவேண்டுமா?

கட்சிக் கோளாறுகளும், மதக் கோளாறுகளும் மனித இனக்கோளாறுகளும் ஒவ்வொரு மனிதருடைய

தனிப்பட்ட வாழ்க்கையின் சூழ்நிலைக் கோளாறுகளனைத்தும் சுட்டுச் சாம்பலாக்கி பொதுவாக மனித வர்க்கம் சமரசமாகவும், சன்மார்க்கமாகவும், உள்ளொழுக்கமாகவும், அறிவுடைமையோடு வாழ்வதற்குரிய வழிகாட்டியாயுள்ள மகத்துவமிகுந்த திருக்குறளின் வழியை எல்லாகட்சிகளும், எல்லாமதங்களும், எல்லா மனிதர்களும் பின்பற்றி சீர்திருத்தமடையவேண்டுமே யல்லாமல், ராமசாமியார் அவர்களைப்போன்று இனப் பற்றையும், கொழுத்த நாஸ்திகப்பற்றையும், கருத்த உடையின் பற்றையும் வைத்துக்கொண்டு திருக்குறளைப் படிக்கவேண்டுமென்றும், அதன்படி நடக்க வேண்டுமென்றும் நாஸ்திகத்தின் அடிப்படையில் திராவிடக்கட்சிக்கு பலம் திரட்டுவதற்காக, ஆதரவு தேடுவதற்காக குறளை ஒரு கருவியாக வைத்து திருக்குறளின் திறைமறைவில் மக்களுக்கு திருக்குறள் உபதேசம் செய்து மக்களை ஏய்ப்பதாயிருக்கக்கூடாது.

ராமசாமியார் அவர்கள், திருக்குறளுக்கு பரிமேலழகர் உரையை ஆதாரமாகக் கொண்டே சார்பாகக்கொரண்டே ஆர்ய தர்மங்களும் அவர்களது நீதி நூல்களுக்கு ஏற்பவே உரை எழுதியிருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டுமானால் வள்ளுவர் ஆக்கியவற்றிற்கு நேர்மாறாகக் கருத்துக் கொடுக்கும்படி மூலபாடத்தைக்கூட பல குறள்களில் திருத்தியிருக்கிறார்கள் என்று சொல்லும்படி காணப்படுகிறது என்று சொல்லுகிறார்.

பகுத்தறிவா? துவேஷ புத்தியா?

தோழர் ராமசாமியார் அவர்களின் கொள்கைப் படியே திருக்குறளில் இடைச்சொருகல் இருக்கிறதென்றே வைத்துக்கொள்வோம்.

தோழர் ராமசாமியார் அவர்கள் பகுத்தறிவு இயக்கத்தலைவரென்றால் பகுத்தறிவை பாரபட்சமின்றி உபயோகித்து நேரிய முறையில் பயன்படுத்துபவரென்றால்,

திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு பொய்யாக எழுதப்பட்டிருப்பதற்காக திருக்குறளில் பல இடைச்சொருகல் கலந்திருப்பதற்காக திருக்குறளைப் படிக்கவேண்டாமென்றோ திருக்குறளைக் கொளுத்த வேண்டுமென்றோ சொல்லாமல், திருவள்ளுவரை துவேஷிக்காமல் எல்லோரும் திருக்குறளைப் படிக்கவேண்டுமென்று சொல்லுவதுபோல்,

ராமாயண, பாரத சரித்திர வரலாறுகளிலும் சரித்திரமாக எழுதியவர்கள் பொய்யான பல சம்பவங்களைப் புகுத்தி எழுதப்பட்டிருப்பதற்காக பகவத்கீதையில் பல இடைச்சொருகல் கலந்திருப்பதற்காக ராமாயண, பாரத, பகவத்கீதைபோன்ற நூற்களை படிக்கவேண்டாமென்று சொல்லாமல், ராமாயண, பகவத்கீதைகளைக் கொளுத்தவேண்டுமென்று சொல்லாமல் ராமாயண பாரதங்களிலுள்ள பொருத்தமில்லாத பொய்களை புறம்பான அனுபவத்திற்கு ஒவ்வாது புகுத்தப்பட்டிருக்கும் சம்பவங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டி பகவத்கீதையிலுள்ள இடைச் சொருகல்களையும் எடுத்துக் காட்டி ராம கிருஷ்ணர்களை தூஷிக்காமல், ராமாயண பாரத பகவத்கீதைகளை எல்லோரும் படிக்கவேண்டுமென்று சொல்லலாமல்லவா? இதுதானே பகுத்தறிவாளர்களினுடைய கடமையாகும் இதுதானே பகுத்தறிவாளர்களினுடைய விசால நோக்கமுமாகும்.

இது பகுத்தறிவா ?

ஆனால் தோழர் ராமசாமியார் அவர்களோ தன்னை ஓர் திருத்தவாதி - பகுத்தறிவாளர் என்று சொல்லிக் கொண்டு என்ன செய்கிறார்?

திருவள்ளுவர் சரித்திரம் பொய்யென்பதற்காக திருக்குறளில் இடைச்செருகல் இருக்கிறது என்பதற்காக திருவள்ளுவரைத் திட்டாமல், திருக்குறளைக் கொளுத்தவேண்டுமென்று சொல்லாமல் திருக்குறளை எல்லோரும் படிக்கவேண்டுமென்று திருவள்ளுவரை கிலாகித்துப்பேசுகிறார்.

பிறகு அதே பகுத்தறிவால் திருவள்ளுவர் சரித்திரத்தில் பொய்யும் புளுகும் கலந்திருப்பதுபோல் திருக்குறளில் இடைச்சொருகல் இருப்பதுபோல் சரித்திரம் எழுதியவர்கள் பொய்யான பொருத்தமில்லாத பல சம்பவங்களை ராமாயண பாரதங்களில் புகுத்தி ராமன் செய்ததாகவும், கிருஷ்ணன் செய்ததாகவும் எழுதப்பட்டிருப்பதற்காக பகவத்கீதையில் பல இடைச்சொருகல் புகுத்தப்பட்டிருப்பதற்காக வேதங்களில்பல இடைச்சொருகல் திணிக்கப்பட்டிருப்பதற்காக ராமாயணம், பாரதம், பகவத்கீதை, வேதங்கள் எல்லாவற்றையும் கொளுத்தவேண்டுமென்றுகூறி ராமனையும், கிருஷ்ணனையும் அவமதித்துப் பேசுகிறார். இதற்கு பகுத்தறிவென்று பெயர்.

வள்ளுவர் சரித்திரத்தில் நம்பத்தகாத சம்பவங்களும், அபாண்டமான பொய்களும் திருக்குறளில் இடைச்செருகல்களும் நிறைந்திருக்கும்போது திருக்குறளையும் திருவள்ளுவரையும் மாத்திரம் விசேஷித்து பேசுவதாம்.

இதேபோல் ராமாயண பாரதங்களில் நம்பத்தகாத சம்பவங்களும், அபாண்டமான பொய்களும் கீதை வேதங்களில் இடைச் செருகல்களும், நிறைந்திருக்கும்போது ராமாயண பாரதங்களையும், ராம கிருஷ்ணர்களை மாத்திரம் தூஷித்து துவேஷித்துப் பேசுவதாம் இதுதான் பகுத்தறிவோ! இதுதான் சீர்திருத்தத் தலைவரின் செயலோ, தூஷித்தால் இடைச்சொருகல்களும்,பொய்சம்பவங்களும் நிறைந்த திருவள்ளுவர் சரிதம், திருக்குறள், ராமன், கிருஷ்ணன், ராமாயணம், பாரதம், கீதை, வேதம் எல்லாவற்றையும் தூஷிக்கவேண்டும்; விசேஷித்தால் திருவள்ளுவர், ராமன், கிருஷ்ணன், ராமாயணம், பாரதம், கீதை, வேதம், எல்லாவற்றையும் விசேஷிக்க வேண்டும். இதுதான் பாரபட்சமில்லாத பகுத்தறிவாளர்களின் பண்பாகும்!

ஆனால் சீர்திருத்தத் தலைவரென்று கூறும் பகுத்தறிவியக்கத்தலைவரென்று கூறும் தோழர் ராமசாமியார் அவர்களோ பகுத்தறிவை பகுத்தறிவென்ற முறையில் பகுத்தறிவோடு பயன்படுத்தத் தெரியாமல் பகுத்தறிவியக்கமென்று பெயர் வைத்துக்கொண்டு பகுத்தறிவு வாதியென்று பெயர் வைத்துக்கொண்டு பகுத்தறிவு, பகுத்தறிவு யென்று சொல்லிக்கொண்டு பகுத்தறிவை வளரவிடாமல் பகுத்தறிவை கொலை செய்கின்றார். தலைவரே இப்படி பகுத்தறிவு என்றால் என்ன? என்பதே தெரியாமல் பறதவிக்கும்போது பகுத்தறிவின் பெயரால் பகுத்தறிவிற்குப் புறம்பான செயல்களையே பகுத்தறிவு செயலென்று, பகுத்தறிவு மார்க்கமென்று பிரசாரம் செய்யும்போது, பாவம் அவரைப்பின்பற்றிய தோழர்களுக்கு பகுத்தறிவின் தத்துவம் எப்படி விளங்கப்போகிறது?

எனவே திருக்குறளில்காணும் இடைச்செருகல்களையும், திருவள்ளுவர் சரித்திரத்தில் காணும் நம்பத்தகாத பொய் சம்பவங்களையும் தள்ளி திருக்குறளைப் படியுங்களென்று சொல்லுகின்ற தோழர் ராமசாமியாரின் பகுத்தறிவானது ராமயண - பாரத - கீதை வேதங்களிலுள்ள இடைச்செருகல்களையும் நம்பத்தகாத பொய் சம்பவங்களையும் கண்டுபிடித்த பகுத்தறிந்து அவைகளையும் தள்ளி ராமயண - பாரத - கீதை வேதங்களை படியுங்களென்று சொல்வதற்கில்லாமல் ராமயண, பாரத, கீதை வேதங்களை கொளுத்த வேண்டுமென்றும், ராமன் கிருஷ்ணன் இவர்கள் அயோக்கியர்களென்றும் தூஷிக்கக்கூடிய துவேஷ புத்தியாக, துர்பாக்கிய புத்தியாக, மாறிப்போய்விட்டது எனவே தனது திராவிட நாஸ்திகக் கட்சி வளர்ச்சிக்காக ஒருதலைப் பட்சமாகப் பேசும் தோழர் ராமசாமியார் அவர்கள் எக்கட்சிக்கும் எம்மதத்திற்கும் இடங்கொடாத பொதுவேதமான ஆஸ்திக தமிழ் வேதமான திருக்குறளை ஏந்திப்பேசுகிறார்.

தமிழன் என்பவன் யார்?
ராமசாமியார் திராவிடரா?

தமிழன் என்றால் திராவிடனென்றால் திராவிட மொழியாகிய தமிழ்ப்பண்புகள் நிறைந்தவன். தமிழ்ப் பண்பு யென்றால் தமிழ் நாட்டின் அதாவது திராவிட நாட்டின் வழக்க ஒழுக்கங்களிலும், தமிழ் மொழி இலக்கிய இலக்கணங்களிலும் ஆழ்ந்த நுணுக்க புத்தி யுடையவனாகவும் தமிழனுடைய லட்சியப் பண்பான தெய்வ நம்பிக்கை, வீரம், கலை, காதல், (காமமல்ல) என்ற நான்கு பகுதிகளையும் சரிசமானமாக வாழ்க்கை யில் அனுபவிக்கும் ஆற்றல் உடையவனாகவும் எவன் இருக்கின்றானோ அவனே தமிழன் என்று அழைக்க தமிழனாக தகுதியுடையவனாகிறான். தெய்வநம்பிக்கை, கலை, காதல், வீரம் என்ற இந்த நான்கு அம்சங்களில் ஒன்று இல்லாவிட்டாலும், அவன் சரியான தமிழன் ஆகமாட்டான் மேற்குறித்தவாறுள்ள சரியான தமிழனுக்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வாதங்களும் ஜாதி சமயச் சண்டைகளும், ஒரு சாராரையோ அல்லது ஒரு நாட்டினரையோ அன்னியன் என்று நினைக்கும், அழைக்கும், பகைக்கும் தன்மையனாக இருக்கமாட்டான் இத்தகைய அம்சங்கள் நிறைந்த சரியான தமிழனை—திராவிடனை தமிழ் நாடு—திராவிட நாடு என்று சொல்லக்கூடிய நமது புனிதமான நாட்டில் தேடிப்பிடிக்கவேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது. தமிழ் நாட்டில் அதாவது திராவிட நாட்டில் பிறந்துவிடுவதால் மாத்திரம் ஒருவன் தமிழனாகவோ திராவிடனாகவோ ஆகிவிடமுடியாது. தமிழனுக்குள்ள அம்சங்கள் எல்லாம் ஒன்று திரண்டு உருவான சரியான திராவிடன் அதாவது சரியான தமிழனான திருவள்ளுவன் எழுதிய திருக்குறளை உபதேசிக்கப் புகும் ஒருவன் பொதுவான தெய்வ நம்பிக்கை, கலை, காதல், வீரம் என்ற நான்கு அம்சங்களும் நிறையப் பெற்ற அனுபவசாலியான உண்மைத்தமிழனாக இருக்க வேண்டும். இப்படி இருப்பவன்தான் திருக்குறளி

லுள்ள நுணுக்கங்களை அனுபவ பூர்வமாய் எடுத்துப் போதிப்பதற்கு தகுதியுடையவனாவான். சமர்த்து உடையவனாவான்.

ஆனால் இன்று நம் தமிழ் நாட்டில் திருக்குறளைப் படிக்கவேண்டுமென்று ஆங்காங்கு பறை சாற்றிக் கொண்டுவரும் ஈ. வே. ராமசாமியார் அவர்கள் தமிழன்தானாயென்று பார்க்கிறபொழுது தமிழனுக்குள்ள தெய்வ நம்பிக்கை, கலை போன்ற பல அம்சங்கள் காணப்படாதவரா யிருக்கின்றார். பெயரளவில் தமிழன் என்று சொல்லிக்கொண்டு உண்மைத் தமிழன் மாதிரி திருவள்ளுவர் கூறிய ஆஸ்திகத்தை அடிப்படையாகக் கொண்ட திருக்குறளையே எடுத்துக்கொண்டு தமிழ் நாட்டினருக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

தமிழன் என்றால் யார் என்ற உண்மை தெரியாத தமிழ் நாட்டில் பிறந்ததற்காக தமிழன் என்று சொல்லிக்கொண்டுள்ள பெயரளவில் தமிழர்களாயுள்ள பாமர மக்களை வேண்டுமானால் ராமசாமியார் அவர்கள் திருக்குறளைக் காட்டி நாஸ்திகப் பிரசாரம் செய்து ஏய்க்கலாம் ஆனால் தமிழன் என்றால் யார்? தமிழனுடைய பண்பாடு என்ன? என்ற விபரம் தெரிந்த தமிழ் நாட்டில் பிறந்த ஒரு தமிழனையாவது ராமசாமியாரல்ல அவரைப்போன்று கோடி ராமசாமியார் வந்தாலும ஏய்க்க முடியாதென்பதை ஈ. வே. ராமசாமியார் அவர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

தமிழ் நாட்டில் பிறந்துவிட்டால் தமிழனா?

தமிழனுக்கான தெய்வ நம்பிக்கை, வீரம், கலை, காதல், தமிழ் நூற்களிலுள்ள இலக்கண இலக்கியங்களோடுள்ள மற்ற நுணுக்கங்கள் போன்ற உயரிய லட்சியங்களை தெரிந்துகொண்டதற்குரிய தமிழனுக்கான அம்சங்கள் இல்லாமல் தமிழ் நாட்டில் பிறந்துவிட்டதற்காக மாத்திரம் தமிழர்கள் என்று சொல்

வதாயிருந்தால் காஸ்பியன் கடலோரங்களிலிருந்து பாரசீக தேசத்தில் வழியாக இந்தியாவிற்கு வந்து தமிழ் நாட்டில் குடியேறிய பரம்பரைகளில் தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டிலேயே வளர்ந்து தமிழ் நாட்டிலேயே இருந்துகொண்டும், இறந்து கொண்டும் இருக்கிற அய்யர்களும் பார்க்கப்போனால் தமிழர்களாகத்தானே இருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டிலேயே பிறந்த தமிழர்களான அய்யர்களை ஏன் அன்னியன் என்று கூறி வேற்றுமை பாராட்ட வேண்டும்.

அய்யர்கள் தமிழர்கள் அல்லவா?

தமிழ் நாட்டில் பிறந்தால் என்ன, அய்யர்கள் தமிழ் நாட்டில் பிறந்தாலும் அவர்களெல்லாம் சுயகாரியப்புலிகள், சூழ்ச்சிக்காரர்கள், வஞ்சகர்கள், பொறாமைக்காரர்கள், தமிழனை அடிமையாக்கி தங்களை உயர்ந்தவர்களாக்கிக்கொண்ட தந்திரக்காரர்கள், நல்லவர்கள் போல் வேஷம் போட்டுக்கொண்டு தமிழ் நாட்டைப்பாழ்படுத்தும் நாசக்காரர்கள், ஏழை குடிகளைக் கெடுக்கும் இரக்கமற்றவர்கள், ஆகையால் அவர்கள் தமிழர்கள் ஆகமாட்டார்கள் என்று கூறுவார்களேயானால் ஆதித்தமிழன் மறையில் தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, தமிழ் நாட்டில் இருந்துகொண்டிருக்கிற அனேக தமிழர்கள் இன்று அய்யர்களையெல்லாம் எடுத்து அபேஸ் பண்ணக்கூடிய அளவில் சுயகாரியப்புலிகளாகவும் சூழ்ச்சிக்காரர்களாகவும், வஞ்சகர்களாகவும், பொறாமைக்காரர்களாகவும், தனது இனத்தமிழனையே அடிமையாக்கி தமிழனிலேயே தங்களை உயர்ந்த தமிழனென்று உயர்த்திக்கொண்டிருக்கிற தந்திரக்காரர்களாகவும், நல்லவர்களைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு நயவஞ்சகமாக ஏழைக்குடிகளைக் கெடுக்கும் இரக்கமற்றவர்களாகவும் பிறர் தெரிந்து கொள்ளாமல் கள்ளமார்க்கெட்டு வியாபாரம் செய்யும் பிரமுகர்களாகவும் இருந்துகொண்டு வருகிறார்களே

இவர்களை எங்கு அனுப்புவது, என்ன செய்வது, இவர்கள் தமிழர்கள்தானா, தமிழ் நாட்டில் பிறந்ததற்காக தமிழன் எது செய்தாலும் பாவாயில்லை அவன் தமிழன், தமிழன்தான் என்று அன்பர் ராமசாமியார் அவர்கள் சொல்லுவார்களேயானால் தமிழ் நாட்டிலேயே பிறந்து, தமிழ் நாட்டிலேயே வளர்ந்து, தமிழ் நாட்டிலேயே இருந்துகொண்டிருக்கிற தமிழர்களான அய்யர்கள் எது செய்தாலும் பாவாயில்லை தமிழ் நாட்டில் பிறந்ததினால் அவர்களெல்லாம் தமிழர்கள் தமிழர்கள்தான் என்று ஏன் சொல்லக்கூடாது என்ற கேள்வி எற்படுகிறதல்லவா.

கலெக்டருக்குப் பிறந்தாலும் கலெக்டர் மகன் ஒரு கலெக்டராகிவிடமுடியாது. இதுபோல் தமிழ் நாட்டில் பிறந்ததினால் ஒருவன் தமிழனாகிவிட முடியாது.

கலெக்டருக்குப் பிறந்தாலும் கலெக்டருக்கான படிப்பும் பண்பாடும் இல்லாவிட்டால் கலெக்டர் மகன் கலெக்டாக முடியாது. இது போலவே ஒருவன் தமிழ் நாட்டில் பிறந்தாலும் தமிழனுக்கான தெய்வநம்பிக்கை, வீரம், கலை, காதல் (காமமல்ல) தமிழ் நூற்களிலுள்ள தமிழன் வாழ்க்கைக்கான, தமிழனுக்கான உயரிய பல அம்சங்களெல்லாம் அனுபவத்தில் இல்லாவிட்டால் தமிழ் மகன் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவன் தமிழனாக முடியாது.

பெதுவாகப் பார்க்கப்போனால் தமிழ் நாட்டில் பிறந்ததற்காக தமிழர்கள் என்று சொல்லக்கூடியவர்களும் தெய்வ நம்பிக்கை. அன்பு, கருணை, சமரஸம், ஜாதித்வேஷமில்லாமை, நல்லொழுக்கம் போன்ற பல உயரிய குணங்கள் நிரம்பப்பெற்ற உத்தமர்களும் இருக்கிறார்கள். இதேபோல் அய்யர்களிலும் ஜாதித்துவேஷமற்று சமரசம், கருணை, அன்பு, நல்லொழுக்கம் போன்ற பல உயரிய குணங்கள் நிரம்பப்பெற்ற உத்தமர்களுமிருக்கிறார்கள்.

அய்யர்களிலும்

சூழ்ச்சி, வஞ்சகம், பொறாமையாளர்களும், ஜாதித்திமிர் பிடித்தவர்களும் தங்களை ஏதோ அபூர்வப் பிறவிகளென்று நினைத்துக்கொண்டிருக்கும் அகங்காரிகளும், ஆச்சார அனுஷ்டானங்களோடு இருந்து கொண்டு தினம் ஆயிரம் குடிகளைக் கெடுக்கும் அக்ரமக்காரர்களும் இருக்கிறார்கள். இதேபோல் தமிழ் நாட்டில் பிறந்ததற்காக தங்களை தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளும்,

தமிழர்களிலும்

சூழ்ச்சி, வஞ்சகம், பொறாமையாளர்களும், ஜாதித்திமிர் பிடித்தவர்களும் பணப்பெருக்கத்தினாலோ நிலப்பெருக்கத்தினாலோ அல்லது பல ஜனங்கள் கொண்டாடி மரியாதை செலுத்துவதினாலோ தங்களை ஏதோ ஓர் அபூர்வப்பிறவிகளென்று நினைத்துக் கொண்டிருக்கும் அகங்காரிகளும் கடவுள் பக்தனைப் போன்று ஆச்சார அனுஷ்டானங்களோடு இருந்து கொண்டு ஏழைக்குடிகளைக் கெடுக்கும் இரக்கமற்றவர்களும் கதர்ச்சட்டையையும் கருப்புச்சட்டையையும் மாட்டிக்கொண்டு கட்சியின் பெயராலும் கள்ள மார்க்கெட்டின் வாயிலாகவும் பணம் திரட்டும் படுபாவிகளும் இருக்கிறார்கள் இது இன்றைய உலக அனுபவம் இவ்வாறிருக்க ராமசாமியார் அவர்கள் பெரும்பாலும் அய்யர்கள் அப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று அய்யர்களை மாத்திரம் துவேஷித்துக்கொண்டு அடாது தீய செயல் புரிந்து கொண்டு தமிழ் நாட்டிலுள்ள தமிழரிடையிலுள்ள தமிழர்களின் வண்டவாளங்களை மூடிக்கொண்டு தமிழ் நாட்டில் பிறந்த எல்லா தமிழர்களும் அதாவது திராவிடர்களும் வீரர்களென்றும் சூரர்களென்றும் மேம்பாடுடையவர்களென்றும் கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்காக பெருமைப்படுத்தி பிரசாரம் செய்கிறார். மேலும் திராவிட நாஸ்திகக்கூடியின் ஊழல்களை இப்படி எடுத்து அம்பலப்படுத்தும் என் போன்றோர்

களையும் மற்றும் திராவிட நாஸ்திகக் கட்சியை எதிர்க்கும் தமிழர்களையும், பார்ப்பன கண்காணிகளென்றும், அய்யர்களின் கையாள்களென்றும், பார்ப்பனர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு பார்ப்பனர்களால் தூண்டப்பட்ட பார்ப்பனர்களின் கைப்பொம்மைகளென்றும் எதிரிகளென்றும் கூறி ஏளனம் செய்கிறார்.

இப்படி ஏளனம் செய்வதில்

ஏதாவது அர்த்தமிருக்கிறதா? அல்லது தனது கட்சிப் பத்திரிகைகளில் இப்படி எழுதுவதில்தான் பொருத்தமிருக்கிறதா?

இப்படி செய்வது ஒரு தேசத்தொண்டா?

அய்யர்கள் மேலுள்ள ஆத்திரத்தால் கடவுள் என்பது அய்யர்கள் தமிழர்களை ஏய்த்துப் பணம் பறிப்பதற்காக செய்து வைத்த கற்பனையென்றும் சூழ்ச்சியென்றும் கடவுள் நம்பிக்கையை தமிழர்களிடமிருந்து அகற்றி தமிழர்களையெல்லாம் உண்மை மனித சுபாவமற்ற வறட்டு நாஸ்திகவாதிகளாக்கி அய்யர்களையெல்லாம் அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற குறுகிய துவேஷ புத்தியை பிரதானமாக வைத்துக்கொண்டு அதனடிப்படையில் வடநாட்டான் தென்னாட்டான் என்ற பாகுபாடுகளை ஏற்படுத்தி வடநாட்டானிடமிருந்து தமிழ் நாட்டைக்காப்பாற்றி தமிழர்களையெல்லாம் சுதந்திரர்களாக்க சற்சனர்களாக்க தமிழர்களுக்காக உழைக்கும் பெருந்தியாகியைப்போல் திருக்குறளின் திறைமறைவில் அய்யர்களை தூஷித்து நாஸ்திகத்தை மக்களிடையில் பரப்பியும் பரப்பிக் கொண்டும் வருகிறார்.

எப்படி தேசத் தொண்டு இயற்றவேண்டும்?

சூழ்ச்சி, வஞ்சகம், பொருமை, கொலை, களவு போன்ற கொடும் செய்கைகளையும் ஜாதி[illegible]மிர்,

மனிதனை மனிதன் அடிமையாக்கும் மடமை. ஒரு ஜாதியார், மற்றொரு ஜாதியாரை ஏமாற்றுவது, ஒருவனை ஒருவன் ஏமாற்றுவது மூடப்பழக்க வழக்கங்களின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றி பணம் திரட்டுவது ஏழைகளின் ஊதியத்தை உறிஞ்சி எக்காளம் போடுவதுபோன்ற தீய செயல்களை எந்த ஜாதியிலுள்ளவர்களானாலும் சரி எந்த மதத்திலுள்ளவர்களானாலும் சரி, எந்தத் தொழிலில் உள்ளவர்களானாலும் சரி, எந்த நாட்டிலிருந்து வந்தவர்களானாலும் சரி, தமிழ்நாட்டில் பிறந்த எந்த தமிழர்களானாலும் சரி, தமிழ் நாட்டில் பிறந்த எந்த அய்யர்களானாலும் சரி, தமிழ் நாட்டில் பிறந்த எந்த முஸ்லிமானாலும் சரி, இன்னும் எவர்களாயிருந்தாலும் சரி இப்படிப்பட்டவர்களை பொதுவாக பாரபட்சமின்றி இன அபிமானமின்றி கண்டித்து - புறக்கணித்து - எதிர்த்து அவர்கள் எந்தவிதமான தீய செயல்களும் மக்களுக்கு இழைக்காதவாறு எந்த விதமான தீய செயல்களுக்கும் மக்கள் இடங்கொடுக்காதவாறு தன் கட்சிக்காரனாயினும் பிற கட்சிக்காரனாயினும் பொதுவாக தீயச் செயல்கள் செய்கிறவர்களினுடைய அயோக்கியத்தனத்தை மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை ஒழித்துக்கட்டியோ அல்லது சீர்திருத்தியோ பொதுவாக மனித சமூகத்திற்கு சேவை செய்வதுதான் தேசத்திற்காக உழைக்கிறேனென்று அல்லது தமிழ் நாட்டிற்காக உழைக்கிறேனென்று சொல்லும் ஒரு தியாகியின் சேவையாகும் தியாகி என்று சொல்லக்கூடியவன் தியாகி என்று சொல்லிக் கொள்ளக்கூடியவன் இப்படி பொதுவாக சேவை செய்தால்தான் மனித சமூகம் முன்னேற்றமடைய முடியும்.

இப்படி பொதுவாக நாட்டிற்குத் தேவையான எந்த சேவையும் செய்யாமல் குறிப்பாக அய்யர்கள் மீதும் அவர்கள் எழுதிவைத்திருக்கும் புத்தகங்களின் மீதும் ஏதோ ஒரு வகையில் ஆத்திரம் கொண்டு துவேஷப்பிரசாரம் செய்துவரும் அளவில் ஆரியர்

களுக்கும் அய்யர்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் அன்பர் ராமசாமியார் என்ன சொல்லு கிருரென்ருல்,

திருவள்ளுவர் குறளைப்பற்றி நான் இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்யிருந்தே பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதற்குக் காரணம் பல ஆரிய நூற்களையும், ஆரிய தர்மத்தையும் நான் கண்டித்துப்பேசிய காலத்தில் என்னில் மாறுபட்ட தோழர்கள் பலரும் எனக்கு எதிர்ப்பாகிய கூட்டத்தினரும் எனது கூட்டங்களில் வந்து என்னைப்பார்த்து எல்லா நூற்களையும், எல்லா தர்மங்களையும் குறை கூறுகிருயே மக்கள் எதைத்தான் பின்பற்றுவது அவைகளுக்குப் பதிலாக நீ என்ன தருகிருய் என்னை கடாவியபோதெல்லாம் நான் அவர்களுக்கு சொன்ன பதில் என்னவென்ருல்,

எனப்பா உன் வீட்டில் மலம் கிடந்து கெட்ட நாற்றம் அடிக்கச் செய்கிறது. சகிக்க முடியவில்லை. அதனுல் பல நோய்கள் உண்டாகின்றன என்று சொன்னுல் அதற்குப்பதிலாக வேறு எதைக்கொண்டு வந்து வைக்கிறது என்று கேட்பதுபோலல்லவா உனது கேள்வியிருக்கிறது யென்று சொல்வேன் என்று சொல்லுகிருர்.

நாஸ்திக ராமசாமியார் அவர்கள் ஆரியர் என்பதற்கும், நூல் என்பதற்கும், தர்மம் என்பதற்கும் அர்த்தம் தெரியாமல் அறிவிற் சிறந்த ஆரியர்கள் (அய்யரல்ல) என்று கூறும் அனுபவிகளால் எழுதப் பட்ட, நூல்களையும் தர்மங்களையும் மல நாற்றத்திற்கு ஒப்பிட்டுச்சொல்லுகிருர். அவர் சொல்வது அவர் வரைக்கும் ஒரு வகையில் வாஸ்தவந்தான். ராமசாமியாரைப் போன்ருர்களுக்கு ஆரியர் (அய்யரல்ல) நூலும், ஆரியர் தர்மமும் மல நாற்றமென்ன - பிண நாற்றமாகக்கூட இருக்கும். ஆரியர் நூலும் ஆரியர் தர்மமும் மல நாற்றமாக ராமசாமியார் அனுபவிப்பதற்குக் காரணமென்ன? என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். என்னவென்ருல்.

172505

கருவாடு விற்கும் சில கருவாட்டுக்காரப்பெண்கள் சந்தையில் கருவாடு விற்றுவிட்டு மாலையில் தங்கள் இருப்பிடம் திரும்பும்போது இடையில் மழை வந்து விட்டது. மழையைக்கண்டதும் அந்தக் கருவாட்டுக் காரப் பெண்கள் ஒரு புஷ்ப வியாபாரியின் வீட்டுத் திண்ணையில்போய் ஒண்டினார்கள் மழையோ விட வில்லை. கனத்த மழையும் காற்றும் நீடித்தது. இதைக் கண்டு கருவாட்டுக்காரப் பெண்களில் ஒருத்தி கூட வந்தவர்களிடம் மழை அதிகமாயிருக்கிறது. எல்லோ ரும் இங்கேயே இரவு தங்கி மழைவிட்டதும் காலையில் வீடு போகலாமென்று கூறினாள் அதற்கு அவளுடன் இருந்த எல்லா கருவாட்டுக்காரப் பெண்களும் சரி தானென்று ஒத்துக்கொண்டு புஷ்ப வியாபாரியின் வீட்டுத் திண்ணையிலேயே படுத்துவிடுவோமென்று சொல்லிக்கொண்டு தூங்க ஆரம்பித்தார்கள். இரவு பனிரெண்டு மணியாகியும் கருவாட்டுக்காரப் பெண் களுக்கு தூக்கமே வரவில்லை. எல்லோரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு "என்னடியக்கா! வேறொரு வீட்டில் போய் ஒண்டியிருக்கக்கூடாதா? எல்லோ ரும் இந்த பூக்காரர் வீட்டில் திண்ணையிலே வந்து தங்க வந்துட்டமே. இந்த பூக்காரர் வீட்டில் மூலையில் கொட்டிக்கிடக்கிற இந்த எளவெடுத்த பூ நாத்தம் அண்டு செய்ய முடியிலியே. இந்த பூ நாத்தத்தாலே நம்ப தூக்கமெல்லாம் கெட்டுப்போச்சு" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே அதிலொருத்தி "நான் ஒரு யோஜனை சொல் றேன். அது மாதிரி செஞ்சமின்னுக்க எல்லோரும் நல்லாத் தூங்கலாம்" என்று சொன்னாள். உடனே அது என்ன யோஜனையென்று மற்ற கருவாட்டுக்கார பெண்கள் கேட்டார்கள். அதற்கு அவள் "நம்ப கொண்டு வந்திருக்கிற ஒவ்வொருத்தரோட வெத்து கருவாட்டு ஓலைக்கூடையிலே இந்த மழைத்தண்ணியை கொஞ்சங்கொஞ்சம் தெளிச்சிக்கிட்டு அந்த ஓலைக் கூடையை தலைக்கு வச்சுகிட்டு படுத்துகிட்டமின்னு இந்த பூ நாத்தமில்லாமே வெத்துக் கருவாட்டுக் கூடையிலே யிருக்கிற கருவாட்டு வாசனையிலேயே

மோப்பம் பிடித்துக்கொண்டு தூங்கிவிடலாம்" என்று சொன்னாள். உடனே எல்லா கருவாட்டுக்காரப் பெண்களும் அப்படியே செய்துகொண்டு கருவாட்டு வாடையிலேலேயே தூங்கிவிட்டார்களாம். எப்படி கருவாட்டுக்காரப் பெண்கள் கருவாட்டு நாற்றத்தை நல்ல வாசனையாகவும் புஷ்ப வாசனையை வெறுக்கத் தகுந்த துர்நாற்றமாகவும் கருதினார்களோ அப்படியே அன்பர் ராமசாமியார் அவர்கள் நாஸ்திகமென்று சொல்லக்கூடிய கருவாட்டு நாற்றத்திலேயே இருந்து காலந்தள்ளிவிட்டு ஆஸ்திக நூற்களும், ஆரியர் நூற்களும், ஆரிய தர்மங்களுமான புஷ்பக்குவியலின் சமீபத்தில் சென்றவுடன் அமைதியில்லாமல் அலை மோதுகிறார். புஷ்ப வாசனையைப் பொறுக்கமுடியாத துர்நாற்றமுடையதென்று முரசு கொட்டுகிறார்.

ஆரிய தர்மமும். ஆரிய நூலும் சகிக்க முடியாத மலநாற்றமென்று கூறிவிட்டு தனது பழக்கத்திலிருந்து வரும் தினே தினே சொற்பொழிவு செய்துவரும் நாஸ்திக கருவாட்டு நாற்றத்தையே நல்ல வாசனை யெனக்கொண்டு அதன் அடிப்படையில் படிக்கப் படிக்க, உணர உணர, மனதிற்கும், புத்திக்கும் புத் துணர்ச்சியைக் கொடுக்கும் அபரிமிததமான திருக் குறளையும் ராமசாமியார் தனது நாஸ்திகக்கருவாட்டுக் கூடையில் அடக்கம் செய்து குறளின் நறுமணத்தை குறைவுபடுத்துகிறார்.

ஆரியனென்ற பலத்திற்கு அர்த்தம் தெரியாமல் ஆரியனென்ற பதத்திற்குரிய அர்த்தத்தை ஆராய்ந்து தெரிந்துகொள்ள ஆற்றலில்லாது அய்யர்கள் மேலுள்ள வெறுப்பினால் - அய்யர்கள் மேலுள்ள கோபத்தினால் ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதுபோல் ஆரியரென்ற பதத்தை உபயோகித்து சுமார் 25 வருஷ காலமாக விபரம் தெரியாமல் அய்யர்களை துவேஷித்துக்கொண்டு வருகிறார். ராமசாமியார் அவர்களுக்கு ஆரியன் என்ற பதத்திற்கே அர்த்தம் தெரியாமல் திண்டாடி தெருவில் நிற்கிறபொழுது

ஆரியர்களுடைய நூற்களையோ - ஆரியர்களினுடைய தர்மங்களையோ எப்படி படித்து உணர்ந்து தெரிந்து கொள்ளமுடியும். பனை மரத்தை தென்னை மரம் என்று தடவிப் பார்த்து வர்ணித்த குருட்டுப் புலவன்போல் அய்யர்களையெல்லாம் ராமசாமியார் அவர்கள் ஆரியர் என்ற பதத்தைக்கொடுத்து துவேஷித்து வர்ணித்து வருகிறார்.

ராமசாமியார் அவர்கள் அய்யர்களை துவேஷிப்பதினாலோ, வெறுப்பதினாலோ நமக்கு அக்கரையில்லை. ஆனல் ராமசாமியார் அவர்களுக்கு சம்பமில்லாத. அவரால் நிந்திக்கவோ, புறக்கணிக்கவோ, மறுக்கவோ இல்லாத ஆரியர் என்ற பதத்திற்குரிய அர்த்தந் தெரியாமல் அவரால் புறக்கணிக்கப்படுகிற அய்யர்களைத் திட்டுவதற்கு இப்படி ஆரியர் என்ற அருமையான பதத்தை உபயோகித்துக்கொண்டு வருகிறாரே என்றும் அவர் சிஷ்ய குழாங்களும் அதைக்கேட்டு ஆனந்தத் தாண்டவமாடுகின்றார்களேயென்றும்பச்சாத்தாபமும் பரிதாபமும் படவேண்டியதாயிருக்கிறது.

ராமசாமியார் அவர்களும் அவரது நாஸ்திக திராவிடக்கழகத் தோழர்களும் ஆரியன் என்ற பதத்திற்கு கீழே கூறப்படும் அர்த்தத்தை தெரிந்துகொண்டு இனியாவது திருந்திக்கொள்ளட்டும்.

ஆரியன் என்றால் யார்?

ஆரியன் என்ற பெயர் எந்த விதிகளைக் கொண்டு ஏற்பட்டது என்பதே நமக்கு இங்கு வேண்டியது ஆரியன் என்ற பதம் ஒரு சாரார்களின் குடும்ப விதிகளைக் குறிப்பதா? சமூக விதிகளைக் குறிப்பதா? மதப் பெயரா? சமுதாயப் பெயரா? என்பதையும் நாம் ஆராயவேண்டும். இதை விடுத்து திராட்சைக்கொடியிலுள்ள திராட்சைப் பழத்தைத் தின்ன நரியானது தாவித் தாவிப் பார்த்தும் எட்டாததால் சீ இந்தப் பழம் புளிக்கும் என்று நரி திராட்சைப் பழத்தை வெறுத்ததாக சிறுவர்கள் படிக்கும் பள்ளிக்கூடப்

புத்தகத்தில் ஒரு கதையுண்டு. அதுபோல் அன்பர் ராமசாமியார் அவர்கள் வடமொழியைத் தாவிக்கூட பாராமல் வடமொழியைப் படிக்க ஆற்றலில்லாமல் வடமொழியிலுள்ள உயர்ந்த நூற்களின் பெயர்களைக் கூட தெரிந்து கொள்ள முடியாமல் சுய விவேகமற்ற மூடப் பழக்க வழக்கமுடைய ஒரு சில வடமொழிக் காரர்களால் - அய்யர்களால் எழுதிவைத்துப்போன ஆராய்ச்சி அனுபவத்திற்கு ஒரு சிறிதும் பொருத்த மில்லாத மட்ட ரகமான வடமொழி நூற்களைப்பற்றி கேள்விப்பட்டதை ஒரு ஊன்றுகோலாகக் கொண்டு எல்லா வடமொழி நூற்களும் இப்படித்தான் இருக்கு மென்று மனோராஜ்யம் செய்துகொண்டு வடமொழி நூற்களெல்லாம் சூழ்சிக்காரர்களால் எழுதப்பட்டது வஞ்சகமாக திராவிடர்களை வைத்து அடிமையாக்கு வதற்காக எழுதப்பட்டது. வடமொழி நூற்களை எந்த திராவிடர்களும் படிக்கக்கூடாது. அப்படி படித்தால் திராவிடர்களெல்லாம் மூடர்களாக - அடி மைகளாக ஆகவேண்டியதுதான் என்றெல்லாம் ராம சாமியார் பிரசாரம் செய்துகொண்டு போகிறார். வட மொழி வேதங்களில் "ஆரியன்" என்றால் ஒழுக்க முடையவன், சிறந்தவன், மேலான குணங்களுடைய வன், தனது கடமைகளை சரிவர உணர்ந்து ஆற்றும் ஆற்றலுடையவன், யாரையும் வஞ்சிக்காதவன், ஜாதி பாகுபாடற்றவன் ஏக தெய்வ இரகசியம் தெரிந்தவன் என்றபொருள் காணப்படுகிறது. இத்தகைய லட்சண லட்சியமுடையவனையே ஆரியன் என்று சொல்வது.

வடமொழியிலுள்ள துவேஷத்தினால் மலர் என்று சொல்வதற்குப் பதில் புஷ்பம் என்று சொன்னால், புஷ்பமென்றால் பீ நாற்றமுடையது என்றும், தமிழ் மொழியபிமானத்தினால் மலர் என்றால் நல்ல வாசனை யுடையது என்றும் ஒருவன் அர்த்தம் கூறுவானே யானால் அது எவ்வளவு அறியாமையாகுமோ அது போல் நன்னெறியுடையவனை ஆரியன் என்றால் வட மொழியிலுள்ள துவேஷ புத்தியினால் ஆரியனென்றால் ஒரு சாரார் என்றும் சூழ்ச்சிக்காரர்களென்றும், ஒழுக்

கன் கெட்டவர்களென்றும் கூறிக்கொண்டு, அதே ஆரியரென்ற பதத்திற்குள்ள தமிழ்ப்பதமான ஒழுக்கமுடையவன் என்ற தமிழ்ப்பதத்திற்கு நன்னெறியுடையவனென்றும் தீச்செயல் புரியாதவனென்றும், மேலான குணமுடையவனென்றும் (தெய்வ நம்பிக்கையுடையவன் என்பதை எடுத்துவிட்டு) அர்த்தம் செய்துகொண்டு ராமசாமியார் அவர்களும், அவரது குழாங்களும் தெரிந்தவர்கள்போல் பிரசங்கம் செய்துகொண்டும், நாஸ்திக நாற்றப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிக்கொண்டும் வருவதைப்பார்த்தால், வயிறு குறுங்கச் சிறிப்பு உண்டாவதோடு ஐயோ, இப்படி இவர்கள் தாங்கள் சொல்லும் விஷயம் தங்களுக்கே தெரியாமல் தெரிந்தவர்கள் போல புனிதமான தமிழ்நாட்டில் கொக்கரித்துக்கொண்டு திரிகிறார்களே என்று பரிதாபம் உண்டாகிறது. இது ஒருபுறமிருக்க,

ஆரியரென்று சொல்லுவதற்கு, ஆரியரென்று அழைப்பதற்கு, ஆரியரென்று போற்றுவதற்கு மிக மிகப் பொருத்தமான ஒழுக்கமும், மேலான குணமும் தனது கடமைகளை சரிவர உணர்ந்து ஆற்றும் ஆற்றலும் வாய்ந்து வஞ்சகம், பொறாமை, சூழ்ச்சி, உயர்வு தாழ்வு, ஜாதி பாகுபாடு, நாட்டு வேற்றுமை, பாஷா துவேஷம், இனவேற்றுமைபோன்ற எதுவும் இல்லாது ஏக தெய்வ இரகசியம் தெரிந்த உத்தம மகானுபாவனை திருவள்ளுவரையும், அவரது திருக்குறளையும் ராமசாமியார் புகழுகிறாரே, இவரால் புகழப்படும் வள்ளுவரும், திருக்குறளும் ராமசாமியார் அவர்களைப் போன்று கடவுளே இல்லை வேதம், ராமாயணம், பாரதம் எல்லாம் பொய் அவைகளை எல்லாம் கொளுத்த வேண்டுமென்று கூறம் ஆராய்ச்சியற்ற குறுகிய நோக்கங்கொண்ட நாஸ்திகரா என்பதை வாசகர்களே நன்றாய் சிந்தித்துப் பாருங்கள்.

திருவள்ளுவர் ஏக தெய்வ உண்மையைப் பின்பற்றும் பரிபூரணமான ஆஸ்திகராகும். இவ்வாறிருக்க ராமசாமியார் செய்யும் அலங்கோலமான நாஸ்திகப் பிரசாரம், ஜாதித் துவேஷம், நாட்டுத் துவேஷம்,

பாஷைத் துவேஷம், அய்யர் துவேஷம், வேதத் துவே ஷம், ஆகமத் துவேஷம், புராணத் துவேஷம், ராமாய ணத் துவேஷம், பாரதத் துவேஷம், ஜனநாயக அர சாங்கத் துவேஷம் போன்ற பைத்தியக்காரத்தன மான பல துவேஷ கோஷங்களுக்கு திருவள்ளுவரின் திருக்குறளில் எதாவது ஒரு இடத்திலாவது ஒரு இடங்கொடுத்திருக்கிறாரா? இல்லவே இல்லை தெய்வ நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்டு மனித வர்க்கம் முழுவதுமே புரட்சியில்லாமல் துவேஷமனப் பான்மையில்லாமல் சமரசமாக வாழ்வதற்குரிய நீதி நெறிகளைப் போதிக்கும் புனிதமான திருக்குறளை. தெய்வ நம்பிக்கையில்லாமல் நாஸ்திகத்தின் அஸ்திவா ரத்தில் புரட்சியுடனும், துவேஷ மனப்பான்மையுட னும் இனவெறி பிடித்த மனிதர்கள் சமரசமில்லாமல் வாழ்வதற்குரிய அநீதி, அறியாமை இவைகளைப் போதித்துவரும் தமிழ்நாட்டின் சனீஸ்வர பகவானாகிய ராமசாமியார் அவர்கள், தனது கொள்கையை விடா மல் திருக்குறளை எல்லோரும் படிக்கவேண்டுமென்று சொல்வதானது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக் கும் முடிச்சு போடுவது போலிருக்கிறது. எனவே புலி பசுத்தோலைப் போர்த்திக்கொண்டதுபோல் நாஸ் திகபுரட்சி துவேஷக் களஞ்சியமான ராமசாமியாரும் அவாது சகாக்களும் திருக்குறள் போர்வையைப் போர்த்திக்கொண்டு நாஸ்திகபுரட்சி துவேஷப் பிரச் சாரம் செய்துகொண்டு வருகிறார்கள். மேலும் இவர் கள் திருக்குறளின் திரைமறைவில் இருந்துகொண்டு திறமையான நாஸ்திகப் பிரசாரம் செய்துவருகிறார்கள் ஆகையால் தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்களே! இவர் கள் பகட்டான பிரசாரத்தைக் கண்டு ஏமாந்து விடா தீர்கள். இவர்கள் எவ்வளவு திருக்குறள் பிரசாரம் செய்தாலும் இவர்கள் நாஸ்திகர்கள் நாஸ்திகர்களே தான், என்பது மாத்திரம் ஞாபகமிருக்கட்டும்,

அன்பர் ராமசாமியார் அவர்கள் கூறுவதுபோல் தமிழ் நூற்களில் மாத்திரம் கவனம்செலுத்தி பாஷை துவேஷத்தினால் மற்ற பாஷைகளிலுள்ள நூற்களை

பாஷைத் துவேஷம், அய்யர் துவேஷம், வேதத் துவேஷம், ஆகமத் துவேஷம், புராணத் துவேஷம், ராமாயணத் துவேஷம், பாரதத் துவேஷம், ஜனநாயக அரசாங்கத் துவேஷம் போன்ற பைத்தியக்காரத்தனமான பல துவேஷ கோஷங்களுக்கு திருவள்ளுவரின் திருக்குறளில் எதாவது ஒரு இடத்திலாவது ஒரு இடங்கொடுத்திருக்கிறாரா? இல்லவே இல்லை தெய்வ நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்டு மனித வர்க்கம் முழுவதுமே புரட்சியில்லாமல் துவேஷமனப்பான்மையில்லாமல் சமரசமாக வாழ்வதற்குரிய நீதி நெறிகளைப் போதிக்கும் புனிதமான திருக்குறளை. தெய்வ நம்பிக்கையில்லாமல் நாஸ்திகத்தின் அஸ்திவாரத்தில் புரட்சியுடனும், துவேஷ மனப்பான்மையுடனும் இனவெறி பிடித்த மனிதர்கள் சமரசமில்லாமல் வாழ்வதற்குரிய அநீதி, அறியாமை இவைகளைப் போதித்துவரும் தமிழ்நாட்டின் சனீஸ்வர பகவானாகை ராமசாமியார் அவர்கள், தனது கொள்கையை விடாமல் திருக்குறளை எல்லோரும் படிக்கவேண்டுமென்று சொல்வதானது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சு போடுவது போலிருக்கிறது. எனவே புலி பசுத்தோலைப் போர்த்திக்கொண்டதுபோல் நாஸ்திகபுரட்சி துவேஷக் களஞ்சியமான ராமசாமியாரும் அவரது சகாக்களும் திருக்குறள் போர்வையைப் போர்த்திக்கொண்டு நாஸ்திகபுரட்சி துவேஷப் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறார்கள். மேலும் இவர்கள் திருக்குறளின் திரைமறைவில் இருந்துகொண்டு திறமையான நாஸ்திகப் பிரசாரம் செய்துவருகிறார்கள் ஆகையால் தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்களே! இவர்கள் பகட்டான பிரசாரத்தைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். இவர்கள் எவ்வளவு திருக்குறள் பிரசாரம் செய்தாலும் இவர்கள் நாஸ்திகர்கள் நாஸ்திகர்களே தான், என்பது மாத்திரம் ஞாபகமிருக்கட்டும்.

அன்பர் ராமசாமியார் அவர்கள் கூறுவதுபோல் தமிழ் நூற்களில் மாத்திரம் கவனம்செலுத்தி பாஷை துவேஷத்தினால் மற்ற பாஷைகளிலுள்ள நூற்களை

மற்ற பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்துள்ள நூற்களைப்பாராமல் அவைகளிலுள்ளவிஷயங்களைஉணர்ந்து கொள்ளாமல் தமிழ்ப் பித்துப்பிடித்துக் கிணற்றுத் தவளைகளாகிவிடாமல்,

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் (ளில்) மெய்ப்பொருள் காண்பதறிவு."

உரை:— எந்தப் பொருளைப் பற்றியோ, எந்த விஷயத்தைப்பற்றியோ, எந்த நூலைப்பற்றியோ, யார் எவரிடத்தில் கேட்ட போதிலும் கேட்கக்கூடிய பொருளில் கேட்கக்கூடியவிஷயத்தில் கேட்கக்கூடிய நூலில் உள்ள உண்மையை மாத்திரம் கேட்கக்கூடியவர் புத்தி கிரகிக்கக்கூடியவண்மையுடையதாயிருத்தல் வேண்டும், என்று திருக்குறளில் நமது திருவள்ளுவர் காண்பிக்கும் வழியைப் பின்பற்றி எந்த ஆரியன் எழுதிவைத்த நூலாயிருந்தாலும் சரி, எந்தப் பார்ப்பனன் எழுதிவைத்த நூலாயிருந்தாலும் சரி எந்தத் தமிழன் எழுதிவைத்த நூலாயிருந்தாலும் சரி எந்த வெள்ளையன் எழுதிவைத்த நூலாயிருந்தாலும் சரி அவசியமில்லை. இவைகளெல்லாம் படிப்பதற்கு வசதியிருந்தால் படித்து அவைகளிலுள்ள உண்மை உண்மையல்லாதவைகளை தீர ஆராய்ந்து பொருத்த மற்றவைகளை புறக்கணித்து பொருத்தமானவைளை நடை முறையில் கடைப்பிடிப்பதோடல்லாமல் எந்தப் பொருளைப்பற்றியோ, எந்த விஷயததைப் பற்றியோ யார் எப்படி சொன்னபோதிலும் சரி அவர்கள் சொல்லுவதை அப்படியே தேவவாக்காக ஏற்றுக் கொள்ளாமல், அவர்கள் சொல்வது; அனுபவத்திற்கு பொருத்தமானதா; உலகியல்பில் அது சரிதானா வென்று பொதுப் புத்தியைக்கொண்டு தீர ஆராய்ந்து உண்மையல்லாதவைகளை,புறக்கணித்துஉண்மையானவைகளை உணர்ந்து, திருந்திக் கொள்ளும்படியான, விசால புத்தியுடைய விவேகிகளாக விளங்குவீர்களாக

172505

பிர்மஞானம் பதிப்பகம்

(இரண்டாவது வெளியீடு)

பெரியாரின் பிதற்றல்

அண்ணாத்துரையின் அலறல்

கட்சி வெறியை அகற்றி பொது புத்தியையும்
சுய அறிவையும் விளக்கும்
பொதிந்த கருத்துக்கள் நிறைந்த நூல்.

விரைவில் வெளிவரும்.

*

ஸ்ரீ குரு கிணகர் சுவாமிகள் அருளிய நூல்கள்.

ஆத்மானுபவ விஞ்ஞான விளக்கம்	0	4	0
அருள்வாக்கு	0	1	0
ஞானவாசகம்	0	2	0
ஆத்மார்த்த பரிசோதக போதனை	0	2	0
பகுத்தறிவா? துவேஷ புத்தியா? ஈரோடு இராமசாமியாரின் சூழ்ச்சி	0	3	0

(தபால் சிலவு வேறு)

கிடைக்குமிடம்:—

M. S. வாசன்,

பிர்மஞானம் பதிப்பகம், புலிவலம் P. O.

— விஜயபுரம், திருவாரூர். —

(தஞ்சை ஜில்லா.)

ஸ்ரீ ராமா (பவர்) பிரிண்டிங் ஒர்க்ஸ்,
129, கீழக் கடலங்குடித் தெரு, கும்பகோணம். 8-49.